

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.7.2023) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான சிங்கப்பூர் நாட்டுத் தூதர் சைமன் வோங் சந்தித்துப் பேசினார். உடன் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சென்னையிலுள்ள சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பாங், செயலாளர் (அரசியல்) வு போ செங் (Mr. Wu Po Cheng), துணைத் தூதர் (அரசியல்) பாசில் டிங், மண்டல இயக்குநர் டினைஸ் டான் (Denise Tan) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## 5 நாட்களுக்கு கன மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூலை 4 -

தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் வளி மண்டல சுழற்சி நிலவுகிறது.

மேலும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.

இந்த வளி மண்டல சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், திருப்பூர், திண்டுக்கல், தேனி உள்ளிட்ட 16 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (3.7.2023), தலைமைச் செயலகத்தில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு சந்தித்து, தேசிய இ - விதான் (காகிதமில்லாத சட்டமன்றம்) திட்டத்தினை மிகச் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தியமைக்காக ஒன்றிய அரசின் நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சகத்தினால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (02.07.2023), முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது கணவர் செ.சந்திரசேகர், ஐ.பி.எஸ். (ஓய்வு) உள்ளார்.

## நெல்லையில் அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில் ஆனித் தேரோட்டம்!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்!

நெல்லை, ஜூலை 4 -

தமிழ்நாட்டிலுள்ள புகழ் பெற்ற திருக்கோயில்களில் ஒன்றான திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயிலில் ஆனித் திருவிழா கடந்த 24.06.2023 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதன் முக்கிய நிகழ்வான ஆனித் தேரோட்டம் நேற்று முன்தினம் (02.07.2023) வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரோட்டத்தினை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயிலில் ரூ. 3.91 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் அம்மன் சன்னதி மேற்கு பிரகார மண்டபம், கருஉருமாறி தீர்த்தக் குளம், அம்மன் சன்னதி மேற்கூரையில் தட்டோடுகள் பதித்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டமைப்பு அமைக்கும் பணிகள், ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நெல்லையப்பர் ஓதுவார் பயிற்சிப் பள்ளி கட்டுமானப் பணிகள், பாளையங்கோட்டை ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் சீர்மிகு வகுப்பறைகள் (ஸ்மார்ட் கிளாஸ்), ஓடுதளம் மற்றும் வகுப்பறைகள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளையும், பள்ளி மாணவிகளுக்கான விடுதி மற்றும் கருணை இல்லம் ஆகியவற்றையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், விடுதி மற்றும் கருணை இல்ல மாணவியருக்கு தேவையான கூடுதல் வசதிகளை செய்து தந்திடவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சிகளில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கா.ப. கார்த்திகேயன், நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், சட்டமன்ற உறுப்பினர்கள் நயினார் நாகேந்திரன், மு.அப்துல் வகாப், ரூபி ஆர். மனோகரன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், மண்டல இணை ஆணையர் திருமதி கவிதா பிரியதர்ஷினி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்;
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்
திருப்பூர் க.செல்வராஜ் MLA., அவர்களின்
அன்பின் வடிவமான தாயார்
தெய்வத்திரு. க.முத்தம்மாள் அவர்கள்

கடந்த 04.07.2021 இதே நாளில்
இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்தார்.

மனங்களில் வாழும், வழிகாட்டும்
எங்கள் அன்பு தெய்வத்திற்கு
இதய அஞ்சலியை
காணிக்கையாக்குகிறோம்.

நீங்கா நினைவுகளுடன்...
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.